ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

========================================================================

# தமிழவனின் எழுத்தும் வாழ்க்கையும்

ஜெ.சா. ஷர்ஜா
பதிவுஎண்: 20213114022032
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம்.

முனைவர்.செ.செல்வகுமார்
நெறியாளர், இணைப்பேராசியர்,
தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையம்
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம், மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

========================================================================

ஆய்வு சுருக்கம்

*1970-ஆம் ஆண்டுகளில் தமிழ் இலக்கியத்தில் பல்வேறு கோட்பாடுகளை அறிமுகப்படுத்தும் திறனாய்வாளராக எழுதத்தொடங்கி படைப்பாளராக மலர்ந்தவர் டாக்டர். கார்லோஸ் என்ற இயற்பெயர் கொண்ட தமிழன். இவர் ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள், சரித்திரத்தில் படிந்த நிழல்கள், ஜி.கே. எழுதிய மர்ம நாவல், வார்சாவில் ஓர் கடவுள், முசல்பனி, ஆடிப்பாவை போல், ஷம்பாலா என்ற ஏழு நாவல்களை எழுதியிருக்கிறார்.*

*இந்த நாவல்கள் பல்வேறு வகைப்பட்ட கோட்பாடுகளை முன் வைக்கிறது. உதாரணமாக சரித்திரத்தில் படிந்த நிழல்கள் என்ற நாவலில் வரலாற்றை அழித்து எழுதும் "பாலின்செஸ்ட் ஹிஸ்டரி", என்ற உத்தியை தமிழ் எழுத்துப்போக்கில் அறிமுகம் செய்கிறார். இவரது நாவல்கள் பன்முக வாசிப்பு மிக்கவை. வாசிப்பில் அரசியல் அவரது எழுத்தையும் தாண்டி பன்முக பரிமாணம் கொண்டவை. மட்டுமல்ல சக பிரதியின் அடிப்படையில் எழுதப்பட்டவை. தமிழவனின் எழுத்தும் வாழ்க்கையும் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## முன்னுரை

*முதன் முதலாக கல்வியறிவு பெறும் வாய்ப்பை பெற்ற சமூகத்தில் முதல் தலைமுறையிலிருந்து பல எழுத்தாளர்கள் தோன்றியிருக்கின்றனர். அதன் வழி தமிழ் எழுத்து இலக்கியத்தில் இதுவரை காணாத பல புதிய சமூக வட்டாரங்களின் வாசனையுடயை இலக்கிய படைப்புகள் தோன்றி இருக்கின்றன. இது தமிழ் இலக்கியத்தின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும்.*

*தம்முடைய அகன்ற இலக்கிய தத்துவப்பயிற்சி, பன்மொழி அறிவு, புலம் பெயர்ந்து வாழும் அனுபவம் இவற்றோடு சொல்புதிது, சுவைபுதிது என்று புதிது புதிதாக இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களின் புனைவுகளும் இக்கால தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியிருக்கின்றன. தமிழ் இலக்கிய உலகில் தனக்கென தனி இடத்தை பதித்த தமிழவனின் எழுத்தும் வாழ்க்கையும் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.*

## தமிழவனின் வாழ்க்கையும் எழுத்துலகும்

*தமிழவனின் இயற்பெயர் கார்லோஸ் சபரிமுத்து. தமிழகத்தின் தென்கோடி கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்தவர். திருநெல்வேலி மற்றும் திருவனந்தபுரத்தில் படிப்பினை முடித்து பெங்களூர் பல்கலை கழகத்தில் தமிழ்த்துறை பேராசிரியராக பணியாற்றினார். அதன்பிறகு ஆந்திரா மாநிலம், குப்பம் நகரில் உள்ள திராவிடப்*

பல்கலைகழகத்தில் பணியாற்றினார். தமிழ் தவிர மலையாளம், கன்னடம் மற்றும் ஆங்கில மொழிகளில் பேசவும் எழுதவும் தெரிந்தவர். பல ஆண்டுகள் பெங்களூரில் வசித்தவர்.

தமிழ் சமகால இலக்கிய உலகில் தமிழவன் குறிப்பிடத்தக்க படைப்பாளி. அமைப்பியல் தத்துவத்தை தமிழ் சமூகத்திற்கு கொண்டு வந்தவர்.

ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள், ஜி.கே. எழுதிய மர்ம நாவல், சரித்திரத்தில் படிந்த நிழல்கள் போன்ற நாவல்களை நவீன வடிவத்தில் எழுதி வெளியிட்டவர்.

இவர் இதுவரை பதினைந்து நூல்களை எழுதியிருக்கின்றார். அவற்றில் திறனாய்வு நூல்களான ஏழு படைப்புகளும் பல வகை மாதிரிகளை சேர்ந்தவையாக உள்ளன.

குமரிமாவட்ட எழுத்துநடை தமிழவனில் பிரதிபலித்தல்

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தமிழில் எழுதும் அத்தனை எழுத்துக்களும் சில பொதுகுணங்கள் உண்டு. அந்த பொதுக்குணங்கள் தமிழவனின் எழுத்தில் அதிகம் பிரதிபலிக்கவில்லை.

தமிழவன் தமிழின் மைய எழுத்துப்பாணியைக் குறிவைத்தே எழுதியிருக்கின்றார். நாவல்கள், சிறுகதைத் தொகுப்பு, தத்துவப் பார்வை சார்ந்து விமர்சன கட்டுரைகள் இவற்றுள் பலவும் அதிகமாக பல வட்டாரங்களில் பேசபப்பட்டிருக்கின்றன. அதிக கண்டனங்கள், அதிக பாராட்டுகள், எதிரிகள், சிஷ்யர்கள் போல் இவரை வட்டமிட்ட சில இளைஞர்கள் இப்படி பல பல சூழல்கள் இவருக்கு நடந்திருக்கின்றன.

தமிழவனின் நாவல்கள்

புதினம் அல்லது நாவல் என்பது மக்களால் பரவலாக விரும்பப்படும் ஒரு இலக்கிய வடிவம் ஆகும். இதில் வாழ்க்கையையும், நிகழ்வுகளும் கற்பனையான உரைநடையில் எழுதப்பட்டிருக்கும்.

வரலாற்று நூற்களும், நாவல்களுக்கும் இடையேயான தொடர்பினை இலக்கியம் கண்டு பேசும் எவ்வளவுத்தான் யாதார்த்தத்தை வரலாற்று நூற்கள் கொண்டிருந்தாலும் அதில் பேசப்படும் ஒவ்வொருவரது யதார்த்த வாழ்கையும் அவரைப் பற்றிய கற்பனையான செய்தியோடு அல்லது இல்லற செய்தியோடு தொடர்புபடுத்தப்பட்டிருக்கும்.

நாவல்களோ புனைவாகச் சித்தரிக்கப்பட்டிருந்தாலும் அவை யதார்த்தத்தை வேறொரு முறையில் கொண்டிருக்கும் அவை குடும்பநாவலாக, சமூக நாவலாக, துப்பறியும் நாவலாக, சரித்திர நாவலாக, சீர்திருத்த நாவலாக அல்லது எந்த வகைவகையிலான நாவலாக இருந்தாலும் நம்பத்தகுந்த வகையில் யதார்த்தத்தைச் சித்தரிக்க முயல்கின்றன. இது உண்மையோ என நினைக்கும் அளவிற்கு யதார்த்தத்தை நெருங்கி அமையும் பட்சத்தில் அவை வெற்றி பெற்ற நாவலாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, தமிழவனின் நாவல்களைச் சுட்டலாம்.

தமிழவனின் நாவல்களான ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் சரித்திரத்தில் படிந்த நிழல்கள், வார்சாவில் ஓர் கடவும், முசல்பனி ஆகியவற்றில் புதிய இலக்கண முறைகள் கண்டறியப்பட்டு அவை நிழல் நாவல் என்றும் புதிய வகையைச் சார்ந்தவை என அடையாளப்படுத்தலாம். இவரது பிற நாவல்களான ஆடிப்பாவைப் போல, ஜி.கே எழுதிய மர்மநாவல் ஆகியவை வேறு வடிவம் சார்ந்தன.

அறிவு தளத்தில் இயங்கும் தமிழவனின் எழுத்து

தமிழவனின் நாவல்கள் அறிவுத்தளத்தில் இயங்குபவை. அவை பொழுதுபோக்கை நாடும் சாதாரணமான வாசகனுக்கானவை அல்ல தமிழ் தெரிந்திருந்தால் சில நாவல்களை வாசித்து புரிந்து கொள்ள முடியும். ஆனால் தமிழவனின் நாவல்களோ ஓரளவு வாசிப்பறியும் பிற துறை அறிவும் இருந்தால் மட்டும் அவற்றை புரிந்துக் கொள்ள முடியும் காரணம் அவை அறிவுத்தளத்தில் இயங்குபவை.

தமிழவன் ஆளுமை

தமிழ் சமகால இலக்கியத்தில் இவருடைய மொத்த படைப்பாளுமை மதிப்பீடு செய்வது என்பது பெரிய பணியாகும். தமிழவன் ஒரு படைப்பாளியாக மட்டுமல்லாமல் ஒரு திறனாய்வாளராகவும், பல்துறை சார்ந்த கல்வித்துறை ஆராய்ச்சியாளராகவும் சிற்றிதழ்

வட்டத்தில் இருந்து செயல்படும் இதழாசிரியராகவும், இலக்கிய பயிற்றாசிரியராகவும் இருப்பது தமிழவனின் ஆளுமையின் வீச்சை உயர்த்திப் பிடிக்கிறது.

முடிவுரை

தமிழவனது எல்லா நாவல்களுமே தமக்கென பொதுவான குணங்கள் கொண்டிருக்கின்றன. அவற்றை நிழல் நாவல்கள் என்ற தனி வகைப்பாட்டிற்குள் தான் அடக்கமுடியும் தமிழவனது ஒவ்வொரு நாவலிலும் தனிப்பட்ட சிறப்பான கூறுகளைக் கொண்டுள்ளன என்பதும் அவை முற்றிலும் பிற தமிழ் நாவல்களினின்றும் விலகி காணப்படுகின்றன என்பதும் தமிழவனின் வாழ்கை மற்றும் எழுத்துலகில் புலனாகிறது.

நூல் குறிப்பு


1. தமிழவனோடு ஓர் உரையாடல் – சண்முக சுந்தரம் 2001
2. ஷம்பாலா ஓர் அரசியல் நாவல் – தமிழவன் 2019
3. ஜி.கே. எழுதிய மர்ம நாவல் – தமிழவன் 2011
4. ஆடிப்பாவைபோல – தமிழவன் 2017
5. வார்ஷாவில் ஒரு கடவுள் – தமிழவன்
6. முசல்பனி – தமிழவன் 2012
7. சரித்திரத்தில் படிந்த நிழல்கள் – தமிழவன் 2010


********* ********* ********** ********* ********* ********** ********** **********